## COMBINED CIVIL SERVICES EXAMINATION- III (GROUP- III.A SERVICES) – 28/01/2023

1. International airports in Tamil Nadu are _______ in number
   **a. 4** b. 3 c. 2 d. 1 e. Answer not known
   தமிழ்நாட்டில் உள்ள பன்னாட்டு விமான நிலையங்கள் __________ ஆகும்
   a. 4 b. 3 c. 2 d. 1 e. விடை தெரியவில்லை

2. Innuyir Kaapoom – Nammai Kaakkum 48 scheme was launched in Tamil Nadu with the aim of
   a. Reducing death due to cancer **b. Reducing death due to road accidents**
   c. Reducing death due to corona d. Reducing death due to mal nutrition
   e. Answer not known
   தமிழ்நாட்டில் 'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48' திட்டத்தின் நோக்கம்
   a. புற்றுநோய் மூலம் ஏற்படும் இறப்பைக் குறைத்தல்
   b. சாலை விபத்தின் மூலம் ஏற்படும் இறப்பைக் குறைத்தல்
   c. கொரோனா மூலம் ஏற்படும் இறப்பைக் குறைத்தல்
   d. ஊட்டச் சத்து குறைபாடு மூலம் ஏற்படும் இறப்பைக் குறைத்தல்
   e. விடை தெரியவில்லை

3. What removes inner negativity of a mankind like a lamp according to valluvar?
   **a. Lamp with truth's pure radiance** b. Light of the Family
   c. Blessed of Lamp d. Lamp of Penance
   e. Answer not known
   அகத்தின் இருளைப் போக்கும் விளக்காக வள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?
   a. பொய்யா விளக்கு b. குடும்ப விளக்கு c. அருள் விளக்கு
   d. தவ விளக்கு e. விடை தெரியவில்லை

4. How does valluvar portray meat eaters?
   a. Irregular **b. unkind** c. Ignorant
   c. Penniless e. Answer not known
   புலாலை உணவாக்கிக் கொள்பவரை வள்ளுவர் எவ்வாறு அழைக்கிறார்?
   a. முறையற்றவர் b. அருளற்றவர் c. அறிவற்றவர்
   d. பொருளற்றவர் e. விடை தெரிவயவில்லை

5. The autobiography 'The Race of my life' is related to
   a. P.T. Usha **b. Milkha Singh** c. Kapil Dev
   d. Mahendra Singh Dhoni e. Answer not known
   'தி ரேஸ் ஆ.்.ப் மை லை.்.ப்' என்ற சுயசரிதை யாருடன் தொர்புடையது?
   a. பி.டி. உஷா b. மில்கா சிங் c. கபில் தேவ்
   d. மஹேந்திர சிங் தோனி e. விடை தெரியவில்லை

6. _________ Metro railway system and services are operational in India in the year 2022

a. 13 b. 14 **c. 15** d. 16 e. Answer not known

____________ மெட்ரோ ரயில் அமைப்பு மற்றும் சேவைகள் இந்தியாவில் 2022 ஆம் ஆண்டில் செயல்படுகிறது

a. 13 b. 14 c. 15 d. 16 e. விடை தெரியவில்லை

7. Which one is an example for Agro based Industry?

**a. Sugar Mill** b. Cement c. Steel factory
d. Mining e. Answer not known

வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை எது?

a. சர்க்கரை ஆலை b. சிமெண்ட் ஆலை c. எ∴கு தொழிற்சாலை
d. சுரங்கம் தோண்டுதல் e. விடை தெரியவில்லை

8. Assertion and Reason type:

Assertion [A] : In the unorganized sector the employment terms are not fixed

Reason [R] : This sector includes a large number of people who are employed on their own and doing small jobs.

**a. Both (A) and (R) are true and (R) explains (A)**
b. Both (A) and (R) are true and (R) does not explain (A)
c. (A) is correct and (R) is false
d. (A) is false and (R) is true
e. Answer not known

கூற்று மற்றும் காரணம் வகை:

கூற்று (A) : ஒழுங்குப்படுத்தப்பட்டாத துறையில் வேலைவாய்ப்பு வரையறைகள் நிலையானதாக இருக்காது.

காரணம் (R) : இத்துறை சுயதொழில் புரியும் ஏராளமான, சிறு அளவில் தொழில்செய்வோரை உள்ளடக்கியது.

a. கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, (A) கூற்றுக்கான காரணம் (R) சரி
b. கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, (A) கூற்றுக்கான காரணம் (R) தவறு
c. கூற்று (A) சரி காரணம் (R) தவறு
d. கூற்று (A) தவறு காரணம் (R) சரி
e. விடை தெரியவில்லை

9. The next term of the sequence
4, 6, 12, 14, 28, 30, ______is

a. 32 **b. 60** c. 62 d. 64 e. Answer not known

பின்வரும் தொடர் வரிசையின் அடுத்த எண்
4, 6, 12, 14, 28, 30, ______

a. 32 b. 60 c. 62 d. 64 e. விடை தெரியவில்லை

10. If SQUARE is denoted by 1917211185, then RECTANGLE is denoted by

a. 1753201147125 b. 1853201114126 **c. 1853201147125**
d. 1953201147125 e. Answer not known

SQUARE என்பது 1917211185 எனக்கு குறிக்கப்பட்டால் RECTANGLE என்பது எவ்வாறு குறிக்கப்படும்.

a. 1753201147125 b. 1853201114126 c. 1853201147125
d. 1953201147125 e. விடை தெரியவில்லை

11. The ration of boys and girls in a club is 3 : 2 Which one of the following could be the actual number of members?

a. 16 b. 18 c. 24 **d. 25** e. Answer not known

ஒரு மன்றத்தில் உள்ள மாணவர்கள் மற்றும் மாணவிகளின் விகிதம் 3 : 2 எனில் பின்வருவனவற்றுள் எது உண்மையான எண்ணிக்கையுள்ள நபர்களைக் குறிக்கின்றது?

a. 16 b. 18 c. 24 d. 25 e. விடை தெரியவில்லை

12. If 7 : 5 is in proportion to x : 25 then the value of x is

**a. 35** b. 25 c. 175 d. 125 e. Answer not known

7 : 5 ஆனது x : 25-க்கு விகித சமம் எனில் 'x' ன் மதிப்பு

a. 35 b. 25 c. 175 d. 125 e. விடை தெரியவில்லை

13. Which one of the following mosque is best known for its tower of victory?

a. Begumpuri Mosque **b. Quwwat – ul – Islam Mosque**
c. Moti Ki Masjid d. Jamali Kamali Mowque
e. Answer not known

பின்வரும் மசூதிகளில் வெற்றி கோபுரத்தால் மிகவும் பிரபலமான மசூதி எது?

a. பேகம்பூரி மசூதி b. குவாத் உல் இஸ்லாம் மசூதி
c. மோட்டி கி-மஸ்ஜித் d. ஜமாளி-கமாளி மசூதி
e. விடை தெரியவில்லை

14. Timur invaded India during the year

a. 1396 **b. 1398** c. 1414 d. 1451 e. Answer not known

தைமூர் இந்தியா மீது படையெடுத்து ஆண்டு எது?

a. 1396 b. 1398 c. 1414 d. 1451 e. விடை தெரியவில்லை

15. Which State implemented first the Panchayati Raj System/

**a. Rajasthan** b. Bihar c. Kerala
d. Tamil Nadu e. Answer not known

எந்த மாநிலம் முதன் முதலில் 'பஞ்சாயத்து ராஜ்' முறையை செயல்படுத்தியது?

a. இராஸ்தான் b. பீஹார் c. கேரளம்
d. தமிழ்நாடு e. விடை தெரியவில்லை

16. Who was the first woman to pay penalty for violation of salt laws during the Civil Disobedience Movement in Tamil Nadu?

**a. Rukmani Lakshmipathi** b. Muthulakshmi Ammaiyar
c. Muvalur Ramamirthan d. Annie Besant
e. Answer not known

தமிழகத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தின் போது உப்புச் சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி யார்?

a. ருக்மணி லட்சுமிபதி b. முத்துலட்சுமி அம்மையார்
c. மூவலூர் இராமாமிர்தம் d. அன்னி பெசன்ட்
e. விடை தெரியவில்லை

17. What helps virtue and also guards us from all evil?

a. Patience **b. Love** c. Pride
d. Education e. Answer not known

அறத்திற்கு மட்டுமன்று, மறத்திற்கும் துணை என்றுத் திருவள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?

a. பொறுமை b. அன்பு c. பெருமை
d. கல்வி e. விடை தெரியவில்லை

18. Moovalur Ramamirdham was born in the district of

a. Cuddalore **b. Mayiladuthurai** c. Thanjavur
d. Kanniyakumari e. Answer not known
மூவலூர் இராமாமிர்தம் ________ மாவட்டத்தில் பிறந்தார்
a. கடலூர் b. மயிலாடுதுறை c. தஞ்சாவூர்
d. கன்னியாகுமரி e. விடை தெரியவில்லை

19. Caudal Vertebrae and Vermiform appendix are example for
a. Secondary organs b. Analogous organs c. Homologous organs
**d. Vestigial organs** e. Answer not known
முள்ளெலும்பு மற்றும் குடல்வால் எதற்கு எடுத்துக்காட்டாகும்?
a. இரண்டாம் நிலை உறுப்புகள் b. செயல் ஒத்த உறுப்புகள்
c. அமைப்பு ஒத்த உறுப்புகள் d. எச்ச உறுப்புகள்
e. விடை தெரியவில்லை

20. Identify the incorrectly matched deficiency disorder.
a. Vitamin $B_3$ – Pellagra b. Vitamin $B_6$ – Dermatitis
**c. Vitamin $B_2$ – Beriberi** d. Vitamin $B_{12}$ – Perinicious Anaemia
e. Answer not known.
தவறாகப் பொருத்தப்பட்டுள்ள குறைபாடு நோயினை கண்டறிக.
a. வைட்டமின் $B_3$ - பெலாக்ரா b. வைட்டமின் $B_6$ - டெர்மாடிட்ஸ்
c. வைட்டமின் $B_2$ - பெரி பெரி d. வைட்டமின் $B_{12}$ - உயிரைப்போக்கும் இரத்த சோகை
e. விடை தெரியவில்லை

21. Who said Indian Constitution as Cooperative Federalism?
**a. Granville Austin** b. Dr. Abedkar c. Jawaharlal Nehru
d. Wheare e. Answer not known
இந்தியாவின் கூட்டாட்சி முறையை கூட்டறவுக் கூட்டாட்சி எனக் கூறியவர் யார்?
a. கிரன்வில் ஆஸ்டின் b. டாக்டர் அம்பேத்கர் c. ஜவஹர்லால் நேரு
d. வியர் e. விடை தெரியவில்லை

22. The River Boards Act was passed the year
a. 1956 **b. 1956** c. 1952 d. 1950 e. Answer not known
நதி நீர் ஆணையச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு.
a. 1956 b. 1956 c. 1952 d. 1950 e. விடை தெரியவில்லை

23. A man repays a loan of Rs. 65,000 by paying Rs. 400 in the first month and the increasing the payment by Rs. 300 every month. How long it will take for him to clear the loan?
a. 10 months b. 15 months c. 25 months
**d. 20 months** e. Answer not known
ஒருவர் தான் பெற்ற ரூ. 65,000 கடனை திருப்பிச் செலுத்த முதல் மாதம் ரூ. 400 செலுத்துகிறார். அதன் பிறகு ஒவ்வொரு மாதமும் முந்தைய மாதம் செலுத்தியதைவிட ரூ. 300 கூடுதலாகச் செலுத்துகிறார். அவர் இந்தக் கடனை அடைக்க எவ்வளவு காலம் தேவைப்படும்?
a. 10 மாதங்கள் b. 15 மாதங்கள் c. 25 மாதங்கள்
d. 20 மாதங்கள் e. விடை தெரியவில்லை

24. 'A' alone can do a piece of work in 35 days. If 'B' is 40% more efficient than 'A', then 'B' will finish the work in how many days?
a. 15 days **b. 25 days** c. 35 days
d. 45 days e. Answer not known

‘A’ என்பவர் தனியே ஒரு வேலையை 35 நாட்களில் முடிப்பார். ‘B’ ஆனவர், ‘A’-ஐ விட 40% கூடுதல் திறன் வாய்ந்தவர் எனில், ‘B’ ஆனவர் அந்த வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?
a. 15 நாட்கள் b. 25 நாட்கள் c. 35 நாட்கள்
d. 45 நாட்கள் e. விடை தெரியவில்லை

25. If 20% of (P +Q) = 50% of (P – Q) then find P : Q.
a. 2:5 b. 3:7 **c. 7:3** d. 5:2 e. Answer not known
(P +Q) வின் 20% மற்றும் (P – Q) வின் 50% சமம் எனில் P : Q காண்க
a. 2:5 b. 3:7 c. 7:3 d. 5:2 e. விடை தெரியவில்லை

26. Which of the following is not a Cash Crop?
a. Sugarcane **b. Coffee** c. Tobacco
d. Cotton e. Answer not known
கீழ்க்கண்டவற்றுள் எது பணப்பயிர் அல்ல?
a. கரும்பு b. காபி c. புகையிலை
d. பருத்தி e. விடை தெரியவில்லை

27. Which is longest peninsular river?
a. Mahanadi **b. Godavari** c. Krishna
d. Narmada e. Answer not known
தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறு எது?
a. மகாநதி b. கோதாவரி c. கிருஷ்ணா
d. நர்மதா e. விடை தெரியவில்லை

28. The play ‘Manonmaniam’ was written by
a. Meenakshi Sundaranar **b. P. Sundaranar** c. U.V. Swaminathar
d. C.W. Damotharan e. Answer not known
‘மனோன்மணியம்’ என்னும் நாடாக நூலை இயற்றியவர் ____________ ஆவார்.
a. மீனாட்சி சுந்தரனார் b. பி. சுந்தரனார் c. உ.வே. சாமிநாதர்
d. சி.வை. தாமோதரனார் e. விடை தெரியவில்லை

29. Keezhadhi excavation suggests that _________ century onwards urbanization has been occurred in Tamil Nadu.
a. 3rd Century BCE b. 4th Century BCE c. 5th Century BCE
**d. 6th Century BCE** e. Answer not known
தமிழ்நாட்டில் நகரமயமாதல் ______ நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது என்பதை கீழடி அகழாய்வு கூறுகின்றது.
a. 3-ம் நூற்றாண்டு பொ.ஆ.மு b. 4-ம் நூற்றாண்டு பொ.ஆ.மு
c. 5-ம் நூற்றாண்டு பொ.ஆ.மு d. 6-ம் நூற்றாண்டு பொ.ஆ.மு
e. விடை தெரியவில்லை

30. The Karachi Session in 1931 of the Indian National Congress was presided over by
a. Abul Kalam Azad **b. Vallabai Patel** c. Jawaharlal Nehru
d. Jawaharlal Nehru e. Answer not known
1931 ஆம் ஆண்டு கராச்சியில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் தலைமை வகித்தவர்.
a. அபுல் கலாம் ஆசாத் b. வல்லபாய் பட்டேல் c. ஜவஹர்லால் நேரு
d. சரோஜினி e. விடை தெரியவில்லை

31. Kattabomman was hanged to death was executed by
a. Col. Heron **b. Major Bannerman** c. Edward Clive
d. John Cradock e. Answer not known
கட்டபொம்மனை தூக்கிலிட்டு கொலை செய்வதை நிறைவேற்றியவர்
a. கர்னல் ஹரான் b. மேஜர் பானர்மென் c. எட்வர்ட் கிளைவ்
d. ஜான் கிராடாக் e. விடை தெரியவில்லை

32. Which of this is the wrong answer?
1 metric tonne is
(1) 10 quintal
(2) 1000 kg
a. (1) only b. (2) only c. Both (1) and (2)
**d. Neither (1) nor (2)** e. Answer not known
கட்டபொம்மனை தூக்கிலிட்டு கொலை செய்வதை நிறைவேற்றியவர்
a. கர்னல் ஹரான் b. மேஜர் பானர்மென் c. எட்வர்ட் கிளைவ்
d. ஜான் கிராடாக் e. விடை தெரியவில்லை

33. If a man has a mass of 50 kg. on Earth, then what is his weight?
**a. 490 N** b. 490 kg c. 50 kg
d. 50N e. Answer not known
இவற்றுள் எந்த விடை தவறானது:
1 மெட்ரிக்டன் என்பது ____________
(1) 10 குவின்டால்
(2) 1000 கிலோகிராம்
a. (1) மட்டும் b. (2) மட்டும் c. (1) மற்றும் (2) ஆகிய இரண்டும்
d. (1) மற்றும் (2) ஆகியவற்றில் எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

34. Assertion (A): Indian Constitution Provides for an Independent Election Commission
Reason (R): To ensure free and fair elections in the country.
**a. Both (A) and (R) are true and (R) explains (A)**
b. Both (A) and (R) are true and (R) does not explain (A)
c. (A) is correct and (R) is false
d. (A) is false and (R) is true
e. Answer not known
கூற்று (A): இந்திய அரசியல் அமைப்பானது தேர்தல் ஆணையம் சுதந்திரமாகச் செயல்பட வழிவகை செய்கிறது
காரணம் (R): சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த உறுதி செய்கிறது
a. கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, (A) கூற்றுக்கான காரணம் (R) சரி
b. கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, (A) கூற்றுக்கான காரணம் (R) தவறு
c. கூற்று (A) சரி காரணம் (R) தவறு
d. கூற்று (A) தவறு காரணம் (R) சரி
e. விடை தெரியவில்லை

35. Find the compound interest for $2\frac{1}{2}$ years on Rs. 4,000 at 10% p.a. if the interest is compounded yearly.
a. Rs. 1,024 b. Rs. 1,032 c. Rs. 1,050
**d. Rs. 1,082** e. Answer not known

ரூ. 4,000 க்கு 10% ஆண்டு வட்டியில், ஆண்டுக்கு ஒருமுறை வட்டி கணக்கிடப்படும் முறையில் $2\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டுவட்டியைக் காண்க.

a. ரூ. 1,024 b. ரூ. 1,032 c. ரூ. 1,050
d. ரூ. 1,082 e. விடை தெரியவில்லை

36. Find the Simple Interest on Rs. 35,000 at 9% per annum for 2 years.
**a. Rs. 6,300** b. Rs. 6,000 c. Rs. 7,400
d. Rs. 6,800 e. Answer not known
ரூ. 35,000-க்கு வட்டி வீதம் 9% எனில், இரண்டு ஆண்டுகளுக்கான தனி வட்டியைக் காண்க.
a. ரூ. 6,300 b. ரூ. 6,000 c. ரூ. 7,400
d. ரூ. 6,800 e. விடை தெரியவில்லை

37. The mention of the word 'Meluhha' in the ________ script is considered to refer to the Indus region
a. Pictogreaphic **b. Cuneiform** c. Brahmi
d. Hieroglyphic e. Answer not known
__________ எழுத்துக்களில் காணப்படும் 'மெலுஹா' என்ற குறிப்பு சிந்து பகுதியைக் குறிப்பதாகும்.
a. சித்திர எழுத்து b. கியூனிபார்ம் c. பிராமி
d. ஹைரோகிளிபிக் e. விடை தெரியவில்லை

38. Which one of the following comes under Political Equality?
**a. Right to petition the government and criticize public policy.**
b. Removal of inequality based on race, colour, sex and caste.
c. All are equal before the law.
d. Prevention of concentration of wealth in the hands of law
e. Answer not known
கீழ்க்கண்டவற்றில் எது அரசியல் சமத்துவம் ஆகும்
a. அரசாங்கத்திற்கு மனுசெய்வது மற்றும் பொதுக் கொள்கைகளை விமர்சிப்பது
b. இனம், நிறம், பாலினம் மற்றும் சாதி அடிப்படையில் சமத்துவமின்மை அகற்றப்படுதல்
c. சட்டத்தின் முன் அனைவரும் சமம்
d. சட்டம் கைகளில் செல்வம் செறிவு தடுப்பு
e. விடை தெரியவில்லை

39. Makkalai thedi Maruthuvam (Health care services at people's doorsteps) was first launched in which district of Tamil Nadu?
a. Dharmapuri b. Madurai **c. Krishnagiri**
d. Theni e. Answer not known
மக்களைத் தேடி மருத்துவம் முதலில் தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது?
a. தர்மபுரி b. மதுரை c. கிருஷ்ணகிரி
d. தேனி e. விடை தெரியவில்லை

40. Tamil Nadu is placed ________ in health index as per the NITI AAYOG report (2018)
a. 1st b. 8th c. 5th **d. 3rd** e. Answer not known
நிதி ஆயோக் (2018) அறிக்கையின் படி சுகாதாரக் குறியீட்டிக் தமிழ்நாடு ____________ இடத்தை வகிக்கிறது.
a. முதல் b. எட்டாம் c. ஐந்தாம்
d. மூன்றாம் e. விடை தெரியவில்லை

41. "Azhukkaarutaiyaan kan Aakkampondru illan". What is the meaning of "Azhukkaaru"?
a. Wrath b. Absence of anger **c. Envious**
d. Evil e. Answer not known
'அழுக்காறுடையான் கண் ஆக்கம்போன் றில்லை'- இதில் அழுக்காறு என்பதன் பொருள் யாது?
a. சினம் b. வெகுளாமை c. பொறாமை
d. தீமை e. விடை தெரியவில்லை

42. To what does Valluvar denote the timely benefit rendered in the Kural "Kaalaththi Naarseydha Nandri"?
a. Bigger than Knowledge b. Greater than the Ocean
**c. Greater than the World** d. Higher than the Sky
e. Answer not known
காலத்தினால் செய்த நன்றியை வளளுவர் எவ்வாறு சுட்டுகிறார்?
a. அறிவைவிடப் பெரியது b. கடலைவிடப் பெரியது
c. உலகத்தைவிடப் பெரியது d. வானைவிடப் பெரியது
e. விடை தெரியவில்லை

43. _______ is the percapita availability of milk per day in India for the year 2020 – 21.
a. 319 grams/day b. 406 grams/day **c. 427 grams/day**
d. 467 grams/day e. Answer not known
2020-21 ஆண்டிற்கான இந்தியாவின் நாள் ஒன்றுக்கான தனி மனித பால் இருப்பு _________ ஆகும்.
a. 319 கிராம்/நாள் b. 406 கிராம்/நாள் c. 427 கிராம்/நாள்
d. 467 கிராம்/நாள் e. விடை தெரியவில்லை

44. Maha Vir Chakra award on 26th January 2021 won by
a. Naik Digendra Kumar b. Major Vivek Gupta c. Brigadier Sant Singh
**d. Colonel B. Santosh Babu** e. Answer not known
26 ஜனவரி 2021-ல் மகாவீர் சக்ரா விருது _____________ அவர்களுக்கு வழங்கப்பட்டது
a. நாயக் திகேந்திர குமார் b. மேஜர் விவேக் குப்தா c. பிரேகிடியர் சாண்ட் சிங்
d. கர்னல் B. சந்தோஷ் பாகு e. விடை தெரியவில்லை

45. Tax levied on personal income is
a. Indirect tax b. Wealth tax **c. Direct tax**
d. Regressive tax e. Answer not known
தனி நபர் வருமானத்தின் மீது விதிக்ப்படும் வரி
a. மறைமுக வரி b. சொத்து வரி c. நேர்முக வரி
d. தேய்வுவீத வரி e. விடை தெரியவில்லை

46. Which of the following statements are true about Central Bank or RBI?
(i) The issuer of Currency
(ii) The issuer of Industrial license
(iii) Banker to the Government
a. (i) only b. (i) and (ii) only **c. (i) and (iii) only**
d. (ii) and (iii) only e. Answer not known
மைய வங்கி அல்லது ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா பற்றிய பன்வரும் வாக்கியங்களில் எவை சரியானவை?
(i) காகிதப் பணத்தை வெளியிடுதல்

(ii) தொழிற்சாலை உரிமம் வழங்குதல்
(iii) அரசுக்கு வங்கியாகச் செயல்படுதல்
a. (i) மட்டும் b. (i) மற்றும் (ii) மட்டும் c. (i) மற்றும் (iii) மட்டும்
d. (ii) மற்றும் (iii) மட்டும் e. விடை தெரியவில்லை

47. The mirror image of the word “STILL”
a. ΓΓITS b. ⅂⅂IꞱS **c. ⅃⅃ITƧ**
d. LLIꞱS e. Answer not known
“STILL” என்ற வார்த்தையின் கண்ணாடி பிம்பம்
a. ΓΓITS b. ⅂⅂IꞱS c. ⅃⅃ITƧ
d. LLIꞱS e. விடை தெரியவில்லை

48. If BAY = 28 then WON =?
a. 46 **b. 52** c. 67 d. 89 e. Answer not known
BAY = 28 எனில் WON =?
a. 46 b. 52 c. 67 d. 89 e. விடை தெரியவில்லை

49. If the H.C.F of 450 and 216 is expressible of the form 23x – 51 then find the value of x.
a. 2 **b. 3** c. 4 d. 5 e. Answer not known
450 மற்றும் 216 ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தியை 23x – 51, என்ற வடிவில் எழுதினால் x-ன் மதிப்பு யாது?
a. 2 b. 3 c. 4 d. 5 e. விடை தெரியவில்லை

50. There are four mobile phones in a house. At 5 am all the four mobile phones will ring together. Thereafter, the first one rings every 15 minutes, the second on rings every 20 minute, the third one rings every 25 minutes and the fourth on rings every 30 minutes. At what time, will the four mobile phones ring together again?
a. 7 O’ Clock b. 1 O’ Clock c. 8 O’ clock
**d. 10 O’ Clock** e. Answer not known
ஒரு வீட்டில் நான்கு அலைபேசிகள் உள்ளன. காலை 5 மணிக்கு எல்லா அலைபேசிகளும் ஒன்றாக ஒலிக்கும். அதன் பின் முதல் அலைபேசியானது ஒவ்வொரு 15 நிமிடங்களிலும் இரண்டாவது அலைபேசியானது ஒவ்வொரு 20 நிமிடங்களிலும் மூன்றாவது அலைபேசியாது ஒவ்வொரு 25 நிமிடங்களிலும் மற்றும் நான்காவது அலைபேசியானது ஒவ்வொரு 30 நிமிடங்களிலும் ஒலிக்கின்றன எனில் அவை மீண்டும் எப்போது ஒன்றாக ஒலிக்கும்?
a. 7 மணி b. 1 மணி c. 8 மணி
d. 10 மணி e. விடை தெரியவில்லை

51. Pick the odd one out:
a. Horse and iron were unknown to the Indus people
b. Indus people used the red quartz stone to design jewellery
**c. Silk dresses were in common use in Indus Culture.**
d. Ornaments were popular among men and women of Indus Culture
e. Answer not known
பொருந்தாததை தேர்ந்தெடுக்கவும்:
a. சிந்து சமவெளி மக்கள் இரும்பு மற்றும் குதிரையை அறிந்திருக்கவில்லை
b. சிந்து சமவெளி மக்கள் ஆபரணம் செய்ய சிவப்பு நிற மணிக்கறிகளைப் பயன்படுத்தினர்
c. பொதுவாகப் பட்டு ஆடைகளே சிந்து சமவெளி கலாச்சாரத்தில் பயன்பாட்டில் இருந்தன
d. சிந்து சமவெளி ஆண், பெண் இருபாலரும் ஆபரணங்களை விரும்பி அணிந்திருந்தனர்
e. விடை தெரியவில்லை

52. 'Drop, cover, hold' is a mock drill a vowal for

a. Fire b. Tsunami **c. Earthquake**

d. Riot e. Answer not known

"விழு!, மூடிக்கொள் ! பிடித்துக்கொள் " என்பது எதற்கான ஒத்திகை?

a. தீ b. சுனாமி c. நிலநடுக்கம்

d. கலவரம் e. விடை தெரியவில்லை

53. ___________ hoisted the National Flag atop of Fort St. George on 26th January, 1932.

a. Tiruppur Kumaran **b. Arya ( Bhashyam)** c. T. Prakasam

d. K. Nageswara Rao e. Answer not known

1932 – ஆம் ஆண்டு ஜனவரி 26 -ஆம் நாளில் புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக் கொடியை ஏற்றியவர் ___________ ஆவார்.

a. திருப்பூர் குமரன் b. ஆரியா (பாஷ்யம்) c. T. பிரகாசம்

d. K. நாகேஸ்வர ராவ் e. விடை தெரியவில்லை

54. _________ spread Theosophical ideas through her newspapers called "New India" and "Common Weal".

**a. Annie Besant** b. Savitri Bai c. Ayyan Kali

d. Sir Sayyid Ahmed Khan e. Answer not known

___________ பிரம்ம ஞானக் கருத்துக்களைத் தன்னுடைய "நியூ இந்தியா" மற்றும் "காமன்வீல்" செய்தித்தாள்களின் மூலம் பரப்பினார்.

a. அன்னிபெசன்ட் b. சாவித்திரிபாய் c. அய்யன்காளி

d. சர் சையது அகமத் கான் e. விடை தெரியவில்லை

55. Match the following:

A. Champaran Satyagraha 1. 1922

B. Communal Award 2. 1932

C. Ahmedeabad Mill strike 3. 1918

D. Bardoli Resolution 4. 1917

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **4** | **2** | **3** | **1** |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. Answer not known

பின்வருவனவற்றைப் பொருத்துக:

A. சம்பரான் சத்தியாகிரகம் 1. 1922

B. வகுப்புவாத விருது 2. 1932

C. அகமதாபாத் ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் 3. 1918

D. பர்தோலி தீர்மானம் 4. 1917

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 3 | 1 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

56. __________ is a tough and thick white sheath that protects the inner parts of the eye.
**a. Sclera** b. Conjunctiva c. Cornea
d. Iris e. Answer not known
__________ என்பது உறுதியான, தடித்த வெண்ணிற உறையாக அமைந்து கண்ணின் உள்பாகங்களைப் பாதுகாக்கின்றது.
a. ஸ்க்லெரா b. கண்ஜங்டிவா c. கார்னியா
d. ஐரிஸ் e. விடை தெரியவில்லை

57. The adulterant added to coffee powder is
a. Chalk powder b. Sand grit **c. Tamarind powder**
d. Metanil yellow e. Answer not known
காப்பித்தூளில் சேர்க்கப்படும் கலப்படப் பொருள் __________ ஆகும்.
a. சாக்பீஸ் பொடி b. மணல்துகள்கள் c. புளி பொடி
d. மெட்டனில் மஞ்சள் e. விடை தெரியவில்லை

58. Which year the right to property was removed from the list of Fundamental Rights?
a. 1976 b. 1972 **c. 1978**
d. 1975 e. Answer not known
எந்த ஆண்டு அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து சொத்துரிமை நீக்கப்பட்டது?
a. 1976 b. 1972 c. 1978
d. 1975 e. விடை தெரியவில்லை

59. Which of the following Constitution is written and Lengthiest in the World?
a. USA **b. India** c. England
d. Irish e. Answer not known
உலகிலேயே எழுதப்பட்ட மற்றும் மிகவும் நீளமான அரசியலமைப்பு எது?
a. அமெரிக்கா b. இந்தியா c. இங்கிலாந்து
d. ஐரிஷ் e. விடை தெரியவில்லை

60. Akash can complete a work in 3 days, whereas Radha can complete it is only 6 days. If they work together, in how many days, can the work been completed?
a. 1 **b. 2** c. 3 d. 4 e. Answer not known
ஒரு வேலையை ஆகாஷ் 3 நாட்களில் முடிப்பார். அதே வேலையை ராதா முடிக்க 6 நாட்கள் ஆகும். இருவரும் சேர்ந்து செய்தால், அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?
a. 1 b. 2 c. 3 d. 4 e. விடை தெரியவில்லை

61. The Dimensions of a brick are 24 cm x 12cm x8 cm. How many such bricks will be required to build a wall of 20 m length, 48 cm breadth and 6 m height?
**a. 25,000** b. 20,000 c. 30,000 d. 22,500 e. Answer not known
ஒரு வேலையை ஆகாஷ் 3 நாட்களில் முடிப்பார். அதே வேலையை ராதா முடிக்க 6 நாட்கள் ஆகும். இருவரும் சேர்ந்து செய்தால், அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?
a. 25,000 b. 20,000 c. 30,000 d. 22,500 e. விடை தெரியவில்லை

62. The price of 10 chairs is equal to that of 4 tables. The price of 15 chairs and 2 tables together is Rs.4,000. Find the total price of 12 chairs and 3 tables.
a. Rs. 3,500 b. Rs.3,750 c. Rs. 3,840
**d. Rs. 3,900** e. Answer not known
10 நாற்காலிகளின் விலை 4 மேசைகளின் விலைக்குச் சமம். 15 நாற்காலிகள் மற்றும் 2 மேசைகள் சேர்த்து விலை ரூ. 4,000. 12 நாற்காலிகள் மற்றும் 3 மேசைகளின் மொத்த விலை என்ன?
a. ரூ.3,500 b. ரூ.3,750 c. ரூ.3,840
d. ரூ.3,900 e. விடை தெரியவில்லை

63. Which is the India's oldest fold mountain rage?
a. Zeskar range b. Karakoram range **c. Aravalli range**
d. Ladakh range e. Answer not known
இந்தியாவின் மிகப் பழமையான மடிப்பு மலைத்தொடர் எது?
a. சாஸ்கர் மலைத்தொடர் b. காரகோரம் மலைத்தொடர் c. ஆரவல்லி மலைத்தொடர்
d. லடாக் மலைத்தொடர் e. விடை தெரியவில்லை

64. Which nuclear power plant is located in Tamil Nadu?
a. Naron **b. Kudankulam** c. Tarapur
d. Narora e. Answer not known
தமிழ்நாட்டில் கீழ்க்காணும் எந்த இடத்தில் அணுமின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ளது?
a. நரோன் b. கூடங்குளம் c. தாராபூர்
d. நரோரா e. விடை தெரியவில்லை

65. Whose enmity should be avoided?
a. Hatred of Warriors **b. Hatred of Word Ploughers (Writers)**
c. Hatred of loved ones d. Hatred of righteous men
e. Answer not known
யாருடைய பகையைத் தவிர்க்க வேண்டும்?
a. வில்லோர் உழவர் பகை b. சொல்லோர் உழவர் பகை
c. அன்பேர் உழவர் பகை d. பண்பேர் உழவர் பகை
e. விடை தெரியவில்லை

66. According to Valluvar under which King will the citizens prosper happily?
a. The one who sustain good words **b. The one who bears bitter criticism**
c. The one who cannot sustain harsh words d. The one who triumphs vengeance
e. Answer not known
எப்படிப்பட்ட அரசனின் கீழ் மக்கள் தங்கி வாழ்வார்கள் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
a. மென்சொல் விரும்புவர் b. கடுஞ்சொல் பொறுப்பவர்
d. கடுஞ்சொல் பொறுக்காதவர் d. பகைமையை வெல்பவர்
e. விடை தெரியவில்லை

67. which one of the following is the second largest port in India?
a. Mumbai b. Mangalore **c. Chennai**
d. Cochin e. Answer not known
பின்வருவனவற்றுள் இந்தியாவின் இரண்டாவது பெரிய துறைமுகம் எது?
a. மும்பை b. மங்களூர் c. சென்னை
d. கொச்சி e. விடைதெரியவில்லை

68. The Padma Vibushan in the field of Arts for the year 2021 was awarded to ____________ in Tamil Nadu.
a. Narayan Devnath b. K.S.Chitra c. Bombay Jeyasree
**d. S.P. Balasubrahmanyam** e. Answer not known
கலைத்துறையில் சாதனைகள் செய்தமைக்காக, 2021 ஆம் ஆண்டிற்கான, தமிழ்நாட்டில் பத்ம விபூஷன் விருது பெற்றவர் யார்?
a. நாராயண் தேவ்நாத் b. கே.எஸ்.சித்ரா c. பாம்பே ஜெயஸ்ரீ
d. எஸ்.பி.பாலசுப்பிரமணியம் e. விடைதெரியவில்லை

69. Natural Satellite of Earth is
a. Andromeda **b. Moon** c. Sputnitk

d. Milkway e. Answer not known
புவியின் இயற்கையான துணைக்கோள்
a. அண்டிரோமீடா b. நிலவு c. ஸ்புட்னிக்
d. பால்வெளி வீதி e. விடைதெரியவில்லை

70. Who was the first Governor of Reserve Bank of India?
**a. Osborne Smith** b. N.K.Singh c. A.K.Chanda
d. C.Rangarajan e. Answer not known
பாரத ரிசர்வ் வங்கியின் முதல் ஆளுநர் யார்?
a. ஓஸ்போர்ன் ஸ்மித் b. N.K.சிங் c. A.K.சந்தா
d. C.ரங்கராஜன் e. விடை தெரியவில்லை

71. The Chief Justice and other Judges of the Supreme Court are appointed by
**a. The president of India** b. The Attorney General c. The Governor
d. The Prime Minister of India e. Answer not known
உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் அதன் பிற நீதிபதிகளை நியமனம் செய்கின்றவர்
a. இந்தியக் குடியரசு தலைவர் b. இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர்
c. ஆளுநர் d. இந்தியப் பிரதமர்
e. விடை தெரியவில்லை

72. The Next term in the sequences
2,5,9,19,37,……….
a. 74 **b. 75** c. 76 d. 82 e. Answer not known
தொடர் வரிசையின் அடுத்த உறுப்பு
2,5,9,19,37,……..
a. 74 b. 75 c. 76 d. 82 e. விடை தெரியவில்லை

73. In Simple Interest, if a sum of money doubles in n years then in which year it will become m times?
a. m b.mn **c. (m-1) x n** d. mn-1 e. Answer not known
தனி வட்டியில் அசலானது n ஆண்டுகளில் இரட்டிப்பாகும் எனில், அது எத்தனை ஆண்டுகளில் m மடங்கு ஆகும்.?
a. m b.mn c. (m-1) x n d. mn-1 e. விடை தெரியவில்லை

74. If 15 chart papers together weigh 50 grams then the number of same type of chart in a pack of 2 ½ Kilogram is
**a. 750** b. 700 c. 680 d. 720 e. Answer not known
15 அட்டைகளின் மொத்த எடை 50 கிராம் எனில், அதே அளவுடைய 2 ½ கி.கி. எடையில் உள்ள அட்டைகளின் எண்ணிக்கை
a. 750 b. 700 c. 680 d. 720 e. விடை தெரியவில்லை

75. __________ is called as the "Museum of Human race".
a. England **b. India** c. America
d. China e. Answer not known
__________ 'மனித இனங்களின் அருங்காட்சியகம்' என அழைக்கப்படுகிறது.
a. இங்கிலாந்து b. இந்தியா c. அமெரிக்கா
d. சீனா e. விடை தெரியவில்லை

76. Pick the odd one out:

a. Chalukyas – Badami b. Chalukyas – Vengi **c. Chalukyas-Nandhi**
d. Chalukyas – Kalyani e. Answer not known
பொருந்தாததை தேர்ந்தெடுக்கவும்:
a. பாதாமி சாளுக்கியர்கள் b. வெங்கிச் சாளுக்கியர்கள் c. நந்திச் சாளுக்கியர்கள்
d. கல்யாணி சாளுக்கியர்கள் e. விடை தெரியவில்லை

77. The concept of social justice arose in the
a. 16th Century b. 18th Century **c. 19th Century**
d. 21st Century e. Answer not known
சமூகநீதி எனும் கருத்துருவானது ____________ ல் உருவானது
a. 16 – ம் நூற்றாண்டு b. 18-ம் நூற்றாண்டு c.19-ம் நூற்றாண்டு
d. 21-வது நூற்றாண்டு e. விடை தெரியவில்லை

78. Who has termed justice as fairness?
a. Samuel Freeman b. Thomas Mertens c. Robert K. Merton
**d. John Rawls** e. Answer not known
நீதியை நியாயம் என்று கூறியவர் யார்?
a. சாமுவேல் ப்ரிமேன் b. தாமஸ் மெர்ட்டன் c. ராபர்ட் கே.மெர்ட்டான்
d. ஜான் ராவல்ஸ் e. விடை தெரியவில்லை

79. “The fire outside can envelop one to eternal sleep;…..
but …. when cannot one sleep?
**a. One cannot sleep in the crisis of poverty**
b. One cannot sleep with the hoard of riches
c. One cannot sleep afflicted in illness
d. One cannot sleep in continuous misery
e. Answer not known
நெருப்பின் நடுவில் கூடப் படுத்துத் தூங்கலாம்
ஆனால், எப்போது தூங்க முடியாது?
a. வறுமையிலிருக்கும் போது தூங்கமுடியாது
b. செல்வம் நிறைந்திருக்கும்போது தூங்கமுடியாது
c. நோயின் கடுமை மிகுந்திருந்தால் தூங்க முடியாது
d. துன்பம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தால் தூங்க முடியாது
e. விடை தெரியவில்லை

80. Who according to Valluvar becomes happy to be together but despairs separation?
**a. Profession of Poets** b. Agricultural Industry c. Medical Field
d. Trade and Commerce e. Answer not known
சேரும் போது மகிழ்வதும் பிரியும் போது மனம் கலங்குவதும் யாருடைய தொழிலாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
a. புலவர் தொழில் b. உழவர் தொழில் c. மருத்துவர் தொழில்
d. வணிகர் தொழில் e. விடை தெரியவில்லை

81. According to which Article, the elections to the Lok Sabha and the Assemblies of every State shall be conducted on the basis of Adult Suffrage?
a. Article – 234 b. Article – 263 **c. Article – 326**
d. Article – 363 e. Answer not known
மக்களவை மற்றும் ஒவ்வொரு மாநில சட்டமன்றங்களிலும் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனக் கூறும் இந்திய அரசியலமைப்பின் சட்டப்பிரிவு யாது?
a. சட்டப்பிரிவு – 234 b. சட்டப்பிரிவு – 263 c. சட்டப்பிரிவு – 326

d. சட்டப்பிரிவு – 363 e. விடை தெரியவில்லை

82. Yaas cyclone was formed in
a. Arabian Sea **b. Bay of Bengal** c. Red Sea
d. Dead Sea e. Answer not known
யாஸ் சூறாவளி எங்கு உருவானது?
a. அரபிக்கடல் b. வங்காள விரிகுடா c. செங்கடல்
d. சாக்கடல் e. விடை தெரியவில்லை

83. According to the Growth rate the successful five year plans are
i. First five year plan ii. Third five year plan
iii. Fifth five year plan iv. Seventh five year plan
a. i, ii and iii b. ii, iii, and iv **c. i, iii and iv**
d. i, ii and iv e. Answer not known
வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் வெற்றியடைந்த ஐந்தாண்டுத் திட்டங்கள்
i. முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் ii. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம்
iii. ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் iv. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்
a. i, ii மற்றும் iii b. ii, iii, மற்றும் iv c. i, iii மற்றும் iv
d. i, ii மற்றும் iv e. விடை தெரியவில்லை

84. India is the home to _________ percent of the World's poor.
a. 12 b. 18 **c. 22** d. 20 e. Answer not known
உலகத்தில் உள்ள மொத்த ஏழை மக்களில் ___________ சதவிகிதம் இந்தியாவில் உள்ளனர்.
a. 12 b. 18 c. 22 d. 20 e. விடை தெரியவில்லை

85. If 'Clock' is related to 'Time', What word is related to Thermometer?
a. Heat b. Radiation c. Energy
**d. Temperature** e. Answer not known
'கடிகாரத்திற்கு' தொடர்புடைய வார்த்தை "மணி" எனில் வெப்பமானிக்கு தொடர்புடைய வார்த்தை என்ன?
a. வெப்பம் b. கதிர்வீச்சு c. ஆற்றல்
d. வெப்பநிலை e. விடை தெரியவில்லை

86. What is the probability that a leap year selected at random will contain 53 Saturdays?
a. 1/7 **b. 2/7** c. 3/7 d. 4/7 e. Answer not known
ஒரு நெட்டாண்டில் 53 சனிக்கிழமைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு காண்க?
a. 1/7 b. 2/7 c. 3/7 d. 4/7 e. விடை தெரியவில்லை

87. Pari needs 4 hours to complete a work. His friend Yuvan needs 6 hours to complete the same work. How long will it take to complete if they work together?
a. 2 hours 20 minutes b. 2 hours 40 minutes **c. 2 hours 24 minutes**
d. 2 hours 44 minutes e. Answer not known
ஒரு வேலையை 4 மணி நேரத்தில் பாரி செய்கிறார். யுவன் அதே வேலையை 6 மணி நேரத்தில் செய்கிறார் எனில் இருவரும் சேர்ந்து அந்த வேலையைச் செய்து முடிக்க எத்தனை மணி நேரமாகும்?
a. 2 மணிகள் 20 நிமிடங்கள் b. 2 மணிகள் 40 நிமிடங்கள்
c. 2 மணிகள் 24 நிமிடங்கள் d. 2 மணிகள் 44 நிமிடங்கள்
e. விடை தெரியவில்லை

88. In Tamil Nadu the lowest sex ratio has recorded in the district of

a. Vellore b. Cuddalore c, Nilgiri
**d. Dharmapuri** e. Answer not known
தமிழ்நாட்டில் எந்த மாவட்டம் குறைவான பாலின விகிதம் கொண்டுள்ளது?
a. வேலூர் b. கடலூர் c. நீலகிரி
d. தர்மபுரி e. விடை தெரியவில்லை

89. Where did the first sub- urban railway started in India?
a. Kolkatta b. Chennai c. Delhi
**d. Mumbai** e. Answer not known
இந்தியாவின் முதல் புறநகர் இரயில் போக்குவரத்து எங்குத் தொடங்கப்பட்டது?
a. கொல்கத்தா b. சென்னை c. டெல்லி
d. மும்பை e. விடை தெரியவில்லை

90. The Fort that was not controlled by Pulithevar is
a. Nerkattumseval b. Vasudevanallur c. Panayur
**d. Sivagiri** e. Answer not known
பூலித்தேவரின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாத கோட்டை ____________ ஆகும்.
a. நெற்கட்டும்செவல் b. வாசுதேவநல்லூர் c. பனையூர்
d. சிவகிரி e. விடை தெரியவில்லை

91. Who among the following poet had relations with Odhisa country?
a. Kamban b. Sekkilar **c. Ottakuthar**
d. Jayamkondan e. Answer not known
ஒரிசா நாட்டோடு தொடர்புடைய புலவர் யார்?
a. கம்பர் b. சேக்கிழார் c. ஒட்டக்கூத்தர்
d. செயங்கொண்டார் e. விடை தெரியவில்லை

92. 'Periyar' the title was conferred on him by Tamil Nadu Women conference held in Madras on
a. 1936 b. 1937 **c. 1938** d. 1939 e. Answer not known
ஈ.வெ.ராவிற்கு ____________ ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மகளிர் மாநாட்டில் 'பெரியார்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.
a. 1936 b. 1937 c. 1938 d. 1939 e. விடை தெரியவில்லை

93. Naujawan Bharat Sabha was founded by
**a. Bhagat Singh** b. Subhash Chandra Bose c. Veer Savarkar
d. Chandrashekhar Azad e. Answer not known
'நவஜவான் பாரத் சபா' என்ற அமைப்பை நிறுவியர் ________ ஆவார்.
a. பகத்சிங் b. சுபாஷ் சந்திர போஸ் c. வீர் சாவர்க்கர்
d. சந்திர சேகர ஆசாத் e. விடை தெரியவில்லை

94. Due to its great commercial importance, it is called 'Black gold".
**a. Petroleum** b. Coke c. Coar tar
d. Ammonia e. Answer not known
வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததால் இதனைக் 'கருப்பு தங்கம்' என அழைக்கின்றனர்.
a. பெட்ரோலியம் b. கல்கரி c. கரித்தார்
d. அம்மோனியா e. விடை தெரியவில்லை

95. The element that combines with other elements to make medicine for treating diarrhea.
**a. Bismuth** b. Zinc c. Calcium

d. Gold e. Answer not known

எந்த தனிமத்தை மற்ற தனிமங்களுடன் சேர்த்து வயிற்றுப்போக்கு சிகிச்சைக்கு மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்?

a. பிஸ்மத் b. துத்தநாகம் c. கால்சியம்

d. தங்கம் e. விடை தெரியவில்லை

96. Which day is celebrated as Human Right day universally?

a. 9th December **b. 10th December** c. 11th December

d. 12th December e. Answer not known

உலக மனித உரிமைகள் தினமாக கொண்டாடப்படும் நாள் எது?

a. டிசம்பர் 9 b. டிசம்பர் 10 c. டிசம்பர் 11

d. டிசம்பர் 12 e. விடை தெரியவில்லை

97. Which year the Tamil Nadu Legislative Council was abolished?

a. 1985 **b. 1986** c. 1987 d. 1988 e. Answer not known

எந்த ஆண்டு தமிழ்நாடு சட்ட மேலவை நீக்கப்பட்டது?

a. 1985 b. 1986 c. 1987 d. 1988 e. விடை தெரியவில்லை

98. The traffic lights at three different road crossings change after every 48 seconds, 72 seconds and 108 seconds respectively. If they change simultaneously at 7 a.m., at what time will they change simultaneously again?

a. 07:12 b. 12:07 c. 07:12:07

**d. 07:07:12** e. Answer not known

48 வினாடிகள், 72 வினாடிகள் மற்றும் 108 வினாடிகளுக்குப் பிறகு மூன்று வெவ்வேறு சாலை குறுக்கு வெட்டுகளில் போக்குவரத்து விளக்குகள் மாறுகின்றன. காலை 7 மணிக்கு அவை ஒரே நேரத்தில் மாறினால், எந்த நேரத்தில் அவை மீண்டும் ஒரே நேரத்தில் மாறும்.

a. 07:12 b. 12:07 c. 07:12:07

d. 07:07:12 e. விடை தெரியவில்லை

99. A river 2 metres deep and 45 metres wide is flowing at the rate of 3 km/hr, then the amount of water that runs into the sea per minute is

a. 3000 $m^3$ b. 3500 $m^3$ **c. 4500 $m^3$**

d. 27000 $m^3$ e. Answer not known

2 மீ ஆழம் மற்றும் 45 மீ அகலமுள்ள ஒரு ஆற்றிலிருந்து நீரானது 3 km/hr வேகத்தில் கடலில் கலக்கிறது எனில் ஒரு நிமிடத்தில் கடலில் கலக்கும் நீரின் அளவு

a. 3000 $m^3$ b. 3500 $m^3$ c. 4500 $m^3$

d. 27000 $m^3$ e. விடை தெரியவில்லை

100. Find the sum in which amounts to Rs.2,662 at 10 % p.a. in 3 years, compounded yearly.

a. Rs.1,500 b. Rs. 1,800 **c. Rs. 2,000**

d. Rs. 2,500 e. Answer not known

10 % ஆண்டு வட்டியில், ஆண்டுக்கு ஒரு முறை வட்டி கணக்கிடப்பட்டால், 3 ஆண்டுகளில் எந்த அசலானது ரூ.2,662 தொகையாகும்.

a. Rs.1,500 b. Rs. 1,800 c. Rs. 2,000

d. Rs. 2,500 e. விடை தெரியவில்லை